**செ.வெ. எண்: 103** **நாள் : – 01.02.2011**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நேர்காணல் மற்றும் கலந்தாலோசனை செய்து உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது. இதுவரை முப்பத்து நான்கு கலந்தாய்வுகள் மற்றும் ஆலோசனை கூட்டங்கள் மூலம் **6,978** மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தின் மலைப்பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் மற்றும் தொலைதூரப் பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் நிரப்ப பத்திரிக்கை விளம்பரம் செய்து, சிறப்பு நியமனம் மூலம் பணியிடங்கள் நிரப்பிட தமிழக அரசு, அரசு ஆணை வெளியிட்டு, பத்திரிக்கை விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி பணியிடங்களை நிரப்ப, பெறப்பட்ட விண்ணப்பங்களில், தமிழ்நாடு மருத்துவக் குழு பதிவு (Tamil Nadu Medical Council Registration) மூப்பு மற்றும் இனசுழற்சி அடிப்படையில் மருத்துவர்களை நியமனம் செய்ய **03.02.2011** மற்றும் **04.02.2011** ஆகிய தேதிகளில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி நிலையம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – **600 008**, என்ற இடத்தில் காலை **10.00** மணிக்கு கலந்தாய்வு நடைபெற உள்ளது.

கலந்தாய்வில் கலந்துகொள்ள அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ள நபர்களின் விவரங்கள் www.tnhealth.org எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மற்றவர்கள் இந்தக் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்க இயலாது. தேர்வு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு அன்றே பணி நியமன ஆணைகள் வழங்கப்படும். நியமன ஆணை பெற்றவர்கள் 7 தினங்களில் பணியில் சேர வேண்டும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**